# வெள்ளியன்று பூரண ஹர்த்தால்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 13-11-85 புதன்கிழமை (ஐப்பசி 28 பைர் 29) முழக்கம் 278

## ஈரோஸ் விடுத்துள்ள வேண்டுகோள்

வாக்குரிமையும் வாழும் உரிமையும் மறுக்கப்பட்டு அடிமைகள்போல வாழ்க்கை நடத்தும் மலையக மக்களின் அவல நிலையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காக இம்மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமையை தேசிய துக்கதினமாகக் கொண்டு அன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக ஈரோஸ் விடுத்துள்ள பிரசுரத்தில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- ஈழவர்களின் எதிர்காலத்தை இருட்டடிப்பு செய்வதற்கென்றே சிறீலங்கா அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. அதன் முதற்கட்டமாக மலையகத்தின் பெருந்தோட்டத் தொழிலாளிகளை நாடற்றவர்கள் ஆக்கியது. வாக்குரிமை, வதியும் உரிமை என்பவற்றைப் பறித்து அரசியல் அனாதைகளாக்கியது. இவ்வாறு செய்வதற்கான 'இலங்கைக் குடியுரிமைச் சட்டம்'-'இந்திய பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டம்' என்பன 1948 நவம்பர் 15லேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அடக்குமுறைக்கு எதிராக போராடிவரும் தமிழ்பேசும் —6ம் பக்கம் பார்க்க

# முதல்வர் எம்.ஜி.ஆர் தமிழீழ குழுக்களை சந்திக்க அழைப்பு

## ரமேஷ் பண்டாரியின் விசேஷ செய்தியுடன் தூதர் திலகரத்ன கொழும்பில் ஆலோசனை

(இது ஒரு பிரத்தியேக செய்தி)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தற்போதுள்ள நெருக்கடி நிலைச் சிக்கலை விடுவித்து, சுமுகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் பொருட்டு தமிழக முதலமைச்சர் மீண்டுமொருதடவை தமிழீழ விடுதலைக் குழுக்களின் தலைவர்களைச் சந்திக்கத் தீர்மானித்துள்ளார். இந்தச் சந்திப்பு எந்த வேளையிலும் நடைபெறலாம்.

புதுடில்லியில் கடந்த வாரப் பிற்பகுதியில்முதல்வர் எம்.ஜி.ஆர். பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இச்சந்திப்பில் மின் சக்தி அமைச்சர் திரு. இராமச்சந்திரனும் பங்கு பற்றியிருந்தார்.

அதற்கு முன்னர் திரு. ரமேஷ் பண்டாரிக்கும், தமிழீழக் குழுக்களுக்கு மிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவில் குழுக்களின் தலைவர்கள் இலங்கை அரசின் நகல் திட்டத்துக்குப் பதிலாக மாற் ...6ஆம் பக்கம் பார்க்க

## கந்தளாய் தோட்டத்துக்குள் ஆறு தமிழர் சடலங்கள் மீட்பு!

(திருமலை)

ஆயுதப்படையினரால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணமான ஆறு தமிழரின் சடலங்கள் இங்குள்ள கந்தளாய் தோட்டத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

எம். இராஜேஸ்வரி (26) எம். சாந்தினி (2), என். இரத்தினசிங்கம் (33) என். தேவராசா(30), வி குலேந்திரராசா (30) கே. சண்முகராஜா (28) ஆகிய அறுவரது சடலங்களுமே மீட்கப்பட்டு திருமலை ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

மொரவேவா சிங்களக் கிராமத்தின் மீது இனம் தெரியாதவர்களால் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் எதிரொலியாக விமானங்கள், ஹெலிகப்டர்கள் மூலம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் இவர்கள் மரணமானதாக கூறப்படுகின்றது.

கடந்த நான்கு தினங்களாக ...6ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா வருமாறு அரச அதிபர் வேண்டுகோள்:

## யாழ்ப்பாணத்திலுள்ள வவுனியா அகதிகளுக்கு உதவி வழங்க கொழும்பு உயர்பீடம் மறுப்பு

கடந்த சில மாதங்களாக வவுனியா மாவட்டத்தில் இருந்து அகதிகள் யாழ். மாவட்டத்திற்கு பெருமளவில் வந்துள்ளனர். இவர்களுக்கு யாழ். அரசாங்க அதிபரின் ஏற்பாட்டின் பேரில் நிவாரண உதவியாக பங்கீட்டுமுறையில் உணவு வழங்கப்பட்டுவந்தது. மேற்கொண்டு இவ்வுதவிகளை தொடர்ந்து செய்வதற்கு கொழும்பு உயர் பீடம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபரும் வவுனியா அரசாங்க அதிபரும் கலந்துரையாடியதன் விளைவாக வவுனியா மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வந்தவர்களை மீண்டும் வவுனியாவுக்கு வருமாறு வவுனியா அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தனது வேண்டுகோ —6ஆம் பக்கம் பார்க்க

## புகையிரத நிலைய கொள்ளை முயற்சி முறியடிப்பு

(இருபாலை)

நேற்று யாழ். புகையிரத நிலையத்தில் இடம்பெறவிருந்த ...6ம் பக்கம் பார்க்க

## வீதியில் நின்ற லொறிக்குள் மூன்று சடலங்கள் கிடந்தன

(பரந்தன்)

உமையாள்புரத்துக்கும் ஆனையிறவுக்கும் இடையில் பிரதான வீதியில் லொறி ஒன்றின் உள்ளே மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது.

ஆயுதப் படையினர் கவச வாகனங்களிலும், ட்ரக்குகளிலும் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பரந்தனுக்கு அண்மையிலும், இயக்கச்சி கரந்தாய்ப் பகுதிகளிலும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் போது மரணமடைந்தவர்களின் சடலங்களே இவை என நம்பப்படுகின்றன.

இறந்தவர்களின் உறவினர்கள் பின்னர் இச்சடலங்களை எடுத்துச் சென்று அடக்கம் செய்ததாகவும் அறியப்படுகிறது.

பரந்தனில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது ஒருவர் மட்டுமே இறந்துள்ளார்.

## வான் மீது சீருடையினர் சூடு ஒருவர் பலி; 4 பேர் காயம்

(மாங்குளம்)

மாங்குளம்-முல்லைத்தீவு வீதியில் பதினொராம் கட்டையருகில் வானில் வந்தவர்கள் மீது சீருடையினர் நடாத்திய துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தால் ஒரு பெண், இரண்டு வயதுக் குழந்தை உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் பயணம் செய்த வான் ஒட்டுசுட்டானில்இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது, காட்டிற்குள் மறைந்திருந்த சீருடையினர் இந்த வான் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனராம். காயமடைந்தவர்களான இராஜேஸ்வரி (27) ...6ஆம் பக்கம் பார்க்க

## பூஸாவிலுள்ள மூன்று இளைஞர் விடுதலையாவதாக அறிவிப்பு

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞரில் மூவர் விடுதலை செய்யப்படவுள்ளதாக ராணுவ அதிகாரிகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் மாகியம்பிட்டியைச் சேர்ந்த அம்பலவாணர் தெய்வேந்திரன், பலாலிசென்ற்ஜூட் வீதி செபமாலை இரத்தினம் ஜோன்சன், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி அன்ரன் என அழைக்கப்படும் சிங்கராஜா பாஸ்கரன் ஆகிய மூவருமே விடுதலை செய்யப் படவுள்ளவர்களாவர்.

பூஸா முகாமுக்கு நேரில் சென்று இவர்கள் மூவரையும் பொறுப்பேற்பதற்கான கடிதங்களைத் தம்மிடம் நேரில் —6ஆம் பக்கம் பார்க்க

## வெள்ள அகதிகளுக்கு இலவச ஒருவார உப உணவுபொருள்

யாழ். மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நிவாரணம் வழங்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இது சம்பந்தமாக சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் விடுத்த பணிப்பில் அப்பகுதிகளில் வெள்ளத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் வீடுகளை இழந்தவர்கள் போன்ற விபரங்களை சேகரித்து சமர்ப்பிக்குமாறு வேண்டியுள்ளார்.

தற்போது அந்தந்த உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவில் இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட இவர்களு —6ஆம் பக்கம் பார்க்க

### வவுனியாவிலிருந்து

## இடம்பெயர்ந்தோர் வீட்டில் கதவு, யன்னல்கள் கொள்ளை

(கொடிகாமம்)

வவுனியாவில் விமானப் படை விஸ்தரிப்புக்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு அருகாமையில் குடியிருந்து அச்சம் காரணமாக வெளியேறியோர் பலர் தங்கள் இல்லங்களை மீண்டும் சென்று பார்வையிட்ட சமயம் அவற்றிலிருந்து கதவு, நிலை, சீற், மின் உபகரணங்கள் உட்பட பல பொருட்கள் கழற்றி எடுக்கப்பட்டிருந்தனவாம்,

தொடர்ந்தும் இவ்வாறு கழற்றி எடுக்கும் நடவடிக்கைகள் அங்கு இடம்பெற்று வருகின்றதாம். வவுனியா கண்டி —6ஆம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு




✱ புதுக்குடியிருப்பு, வைத்தி லிங்கம் பொன்னும்குஞ்சு தம்பதியின் மகன் கமலதாஸ் இன்று நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ நாயன்மார்கட்டு, நகுலேந்திரன் புவனேஸ்வரி தம்பதியின் மகன் செந்தூரன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கட்டப்பிராய், மனோரஞ்சித ராஜா ஞானதிலகராணி தம்பதியின் மகன் கிரிஷாந் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ பண்டத்தரிப்பு, தர்மகுலசிங்கம் மகேஸ்வரி தம்பதியின் மகள் கார்த்திகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ இணுவில், மஞ்சத்தடி பாலசுப்பிரமணியம் சுசீலாதேவி தம்பதியின் மகன் சஜுதன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ வட்டுக்கோட்டை, செல்லரத்தினம் சரஸ்வதி தம்பதியின் மகன் அகிலேஸ்வரன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

### சாவகச்சேரி இந்துக்கல்லூரி
### பழைய மாணவர் சங்க
## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 16/11/85 சனிக்கிழமை காலை காலை 10 00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். தயவு செய்து குறித்த நேரத்திற்கு சமுகம் தரவும்.

சி. துரைராசா
செயலாளர்


## மரண அறிவித்தல்
### திரு. இராசநாயகம் துரைச்சாமி
[விதானையார்]

முன்னாள் இராமநாதன் கல்லூரி லிகிதரும், மாவிட்டபுரம் முன்னாள் விதானையாரும் ஆகிய இராசநாயகம் துரைச்சாமி 09-11-1985 இல் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம்சென்ற இராஜயோகலட்சுமியின் அன்புக் கணவரும், குகநேசன், சிவநேசன் (சந்திரா) ஆகியோரின் அருமைத் தந்தையும், இராஜராஜேஸ்வரியின் அன்பு மாமனாரும், காலம் சென்ற திருமதி தங்கம்மா, நடராசா (முன்னாள் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்), திருமதி நல்லநாயகிஅம்மா நவரத்தினம் ஆகியோரின் சகோதரனும்; சுந்தரவடிவேல், கோகுலவாசன், அஜிராணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் அன்று கீரிமலையில் நடைபெற்றதென்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

தகவல்: இ. து. குகநேசன் குடும்பத்தினர்

சடச்சப்பை,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

## நினைவஞ்சலி
### வேலாயுதர் சின்னையா



தோற்றம்: 3-1-1909 மறைவு: 15-11-1982
திதி: 13-11-1985

ஆண்டுகள் மூன்று ஆயின
ஆனாலும் எம் நெஞ்சம் ஆறவில்லை
மூன்றாவது திதி நினைவு தினமாகிய
இன்று அன்புடன் நினைவு கூரும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

85, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## அடுத்தாண்டு அமுலுக்கு வரும்
(அரியாலை)

பனை மரங்களின் உரிமையாளர்கள், மரக்காலை வைத்திருப்போர், மரம் வெட்டுபவர்கள் ஆகியோரைப் பதிவு செய்து கொள்ளும் முறை 1986-ம் ஆண்டில் இருந்து அமுலுக்குக் கொண்டுவரப் படும் இம் முறையால் கண்டபடி பனை மரங்கள் வெட்டுவது குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது. இம் முறை பனை அபிவிருத்திச் சபையினால் கண்டிப்பாக அமுல் நடத்தப் படும்.

## சந்தையாக பாவிக்க அனுமதி
(புலோலி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப-அலுவலகத்திற்குச் சொந்தமான பழைய கிராம நீதிமன்றக் கட்டிடத்தை சந்தையாகப் பாவிப்பதற்கு யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை அனுமதி வழங்கியுள்ளது.

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள இப்பழைய கிராம நீதிமன்றக் கட்டிடம் நீண்டகாலமாக பாவனையின்றி இருந்து வந்தது. இக்கட்டிடத்தை மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்தே இக்கட்டிடத்தை சந்தையாகப் பாவிப்பதற்கு யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை அனுமதி வழங்கியுள்ளது.

இக்கட்டிடத்தில் வெகுவிரைவில் சந்தை இயங்க ஆரம்பிக்குமென யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. பீ. கனகசபாபதி தெரிவித்தார்.

## ஊழியர் வேண்டுகோள்
(இருபாலை)

கடும் மழை காரணமாகவும் வெள்ளம் காரணமாகவும் பாதிக்கப்பட்ட அஞ்சல் தொடர்பு ஊழியர்களுக்கு உடன் நிவாரணம் வழங்குமாறு கோரி யாழ். அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்க செயலாளர் வி. எஸ். தங்கவடிவேல் யாழ். அரசாங்க அதிபருக்கு தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடும் மழை காரணமாக யாழ். தபாற் கந்தோரைச் சுற்று வெள்ளம் நிற்பதாலும் தபாற் கந்தோருக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதாலும் ஊழியர்கள் வேலை செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### வியாழ மாற்றம்

1986ல் வியாழ மாற்றத்தினால் ஈழத் தமிழ் மக்களுக்கு நிகழப்போகின்ற பலா பலன்கள் என்ன? பன்னிரு ராசிகளின் பலன். ரூபா இரண்டு மட்டுமே. சோதிடர் V. A. சிவராசா, வேலணை.

### தேவை

யாழ். நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு தமிழ் தட்டெழுத்தாளர் (பெண்) தேவை. ஆங்கில தட்டெழுத்து அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவு திகதி; 14-11-85 விள. இல. B/846 C/o ஈழமுரசு, 37, கண்டி வீதி யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்
### யோ. யேசுவடியான்

கச்சேரியடியை பிறப்பிடமாக கொண்டவரான யோ. யேசுவடியான் 11-11-85 அன்று காலமாகிவிட்டார். இவர் பரிபூரணத்தின் அன்புக் கணவரும் காலம் சென்ற நவமணி, சுரோன்மணி, மனோன்மணி, ஆசீர்வாதம் (குலம் சன்ஸ்) செல்வராஜ் (கமலா ஸ்ரோர்ஸ்) இரேனம்மா ஆகியோரின் தகப்பனாரும் ஆவார். இவரின் இறுதிக் கிரிகைகள் இன்று (13-11-85) காலை 11.00 மணியளவில் பரி. யோவான் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 09-5-1924
உதிர்வு: 12-11-1982

### திரு. J. T. றிச்சேட் (P. H. I.)

அன்பினால் எம்மவர்களை ஆட்சி கொண்டீர்கள்
பண்பினால் பற்பலரை ஈர்ந்தெடுத்தீர்கள்
பாசமதை எங்களுக்குப் பகிர்ந்தளித்தீர்கள்
எம்மைப் பரிதவிக்கவிட்டு நீங்கள் மட்டும் சென்றதென்ன
பிரிந்து சென்றிங்கே ஆண்டு மூன்றானாலும் உங்கள்
நினைவு உள்ளத்தில் பல்லாண்டாய் உயிர்வாழும்.

இங்ஙனம்
உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், மச்சான்மார்,
நண்பர்கள்

183, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## பெற்ரு எசன்ஸ் சப்ளையேர்ஸ்
## PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

- ஊதுபத்தி
- சாம்பிராணி
- விளைவு சூடம்
- ரல்கம் பவுடர்
- வெள்ளை மஞ்சள் வசலின்
- வாசனைத்திரவிய எண்ணெய்
- ஓடிக்கொலோன்
- குளுக்கோஸ்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

- பேப்பர் வகை
- பொக்ஸ்போட்
- காட்போட்
- ஆர்ட்போட்
- நியூஸ்பேப்பர்
- ஒயில் பேப்பர்
- பிறவுண் பேப்பர்
- ரிசு பேப்பர்
- சலப்பின்

மற்றும் எல்லாவித பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்

இன்றே எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்து பாருங்கள்
**223, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்**
**223, Power House Road, Jaffna.**

# வலி. மேற்கில் மழையினால் பலர் வீடிழந்துள்ளனர்

(பண்டத்தரிப்பு)

அடை மழையால் மாதகல், சாந்தை, வடலியடைப்பு, சித்தன்கேணி கிராமங்களில் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. மாதகலில் மாத்திரம் பதினைந்து குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. ஐந்து குடும்பங்களின் வீடுகள் சரிந்து விழுந்தும், சுவர்கள் சாய்ந்துமுள்ளன. மழை வெள்ளம் வற்றினாலும் அவர்கள் தங்கள் வீடுகளுக்கு செல்ல முடியாத அவலத்திற்குள்ளாகியுள்ளனர்.

வடலியடைப்பு 6ம் வட்டாரத்தில் பல வீடுகளுள் வெள்ளம் புகுந்து வீட்டாரை உறவினர் வீடுகளில் தஞ்சம் புக வைத்துள்ளது. சீனியர் கணபதிப்பிள்ளை என்பவரின் வீடு நடு நிசியில் சரிந்து வீழ்ந்த போது அதனுள் உறக்கத்தில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினராம்.

சித்தன்கேணி பெரிய மதகுப் பகுதி குடும்பங்கள்பல உறவினர் வீடுகளில் உள்ளன. அப்பகுதியில் மேற்குப் புற கிராம வெள்ளம் பாய்வதால் வளவுகள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

சாந்தைக் கிராமத்திலும் பல ஏழைத் தொழிலாளர் குடிசைகள் வெள்ளத்தினால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. பண்டத்தரிப்பு, கீரிமலை வீதியால் வெள்ளம் மேவிப் பாய்கிறது. பல வீடுகள் வெள்ளத்தில் மிதப்பது போல காட்சியளிக்கின்றன,

வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையத்தினர் கான்களைச் சுத்தஞ் செய்தல், மதகுகளை மூடி வளர்ந்திருந்த பற்றைகளை வெட்டியும், சிலர் தங்கள் வளவுகட்கால் வெள்ளம் ஓடுவதை தடுத்து போட்டிருந்த தடைகளை அகற்றியும் செவ்வாய்க்கிழமை சிரமதானப் பணி செய்தனர். வெள்ளம் புகுந்த வீட்டினர்கட்கும் பொருட்கள் நனையாதும், வெள்ளம் இழுத்துச் செல்லாதும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உதவி புரிந்தனர்.

இந்த மழையால் நெல் வேளாண்மையும் பெரும் பாதிப்படைந்துள்ளது. பெரு வெள்ள ஓட்டம் நட்ட பயிர்களை அழைசி அள்ளிச் சென்று விட்டன.

## நிதியுதவி

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையம் விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ். அபிவிருத்திச் சபையின் இருபது ஊழியர்கள், மூவாயிரத்து இருநூற்று இருபத்தொன்பது ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

## மிளகாய் விதைகள்

(கொடிகாமம்)

மகா இலுப்பல்லம விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து தருவிக்கப்பட்ட எம். ஐ-1, எம். ஐ-2 இன மிளகாய் விதைகளும் ஏனைய விதையினங்களும் தற்பொழுது குடாநாட்டிலுள்ள கமநலச் சேவை நிலையங்களில் விநியோகிக்கப்படுகின்றன.

# கால்நடை வளர்ப்பிற்கு விஞ்ஞான அணுகுமுறை தேவை

(வேலணை)

கால் நடைகளை வளர்ப்பதற்கு விஞ்ஞான அணுகு முறைகள் தேவை. இதன்படி செயலாற்றினால் கால் நடைகளிலிருந்து சிறந்த பலனைப் பெறக்கூடியதாக இருக்கும். மனிதர்களுக்கு எவ்வாறு தடுப்பு மருந்துகளும், வைத்திய சேவைகளும் அளிக்கப்படுகிறதோ அவ்வாறே கால் நடைகளுக்கும் கொடுக்க வேண்டும். அப்போதுதான் தொற்று நோயினின்றும், ஏனைய நோயினின்றும் இவைகளை காக்க முடியும்.

இவ்வாறு வேலணை கால் நடை ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரி திருமதி. எஸ். சாம்பசிவம் குறிப்பிட்டார். வேலணையில் கால்நடை பராமரிப்பு சம்பந்தமான கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு மேலும் உரையாற்றிய திருமதி. சாம்பசிவம்:-

புரதசத்து குறைபாட்டினால் நோய்கள் மனிதனை எளிதில் பீடிப்பதுடன் குழந்தைகளது மனோவளர்ச்சியும் குன்றக் கூடியதாகஇருக்கும். புரதச்சத்தை நாம் பெறவேண்டுமானால்கால் நடைகளின் தேவை அத்தியாவசியமாகின்றது. பிரயோசனமற்ற கால்நடைகளை வளர்ப்பதை தவிர்த்து பயன் பெறக் கூடிய கால்நடைகளை உருவாக்க வேண்டும்.

மேற்படி கருத்தரங்கில் வேலணை விவசாயப் போதனாசிரியை திருமதி. புஷ்பலக்சுமி சுப்பிரமணியம் வீட்டுத் தோட்டம் என்னும் பொருள் பற்றி உரையாற்றினார்.

# சாவகச்சேரி வட்டார தமிழ்த்தினப் போட்டிமுடிவு

(மிருசுவில்)

சாவகச்சேரி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் நான்கு பிரிவுகளிலும் முதலிடங்களைப் பெற்றோர்விபரம் பின்வருமாறு:-

பிரிவு ஒன்று:- வாசிப்பு — ஞா. செறின் நிவாந்தி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, எழுத்து – க. மலர்விழி மட்டுவில் வடக்கு கமலாசினி வித்தியாலயம், ஆக்கம் – ஞா. செறின் நிவாந்தி சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, பாஓதல் – க. தாரணி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

பிரிவு இரண்டு:- வாசிப்பு – யோ. மேரிசிற்ரூ நாவற்குழி மகாவித்தியாலயம், எழுத்து – ய. துஸ்யந்தினி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், ஆக்கம் – வ. எழில் மதி மட்டுவில் வடக்கு சந்திரபுர மகாவித்தியாலயம், பாஓதல் – க. சகுந்தலா சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பிரிவு மூன்று:- கட்டுரை – சி. சுமதி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், ஆக்கம் – இ. ருஜேந்திரமணி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பேச்சு – கோ. மைதிலி சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பாஓதல் – த. மகேஸ்வரி நுணாவில் தமிழ் கலவன் பாடசாலை.

பிரிவு நான்கு:- கட்டுரை – சி. புனிதவதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், ஆக்கம் – இ. கோகிலராணி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, பேச்சு – இ, இராஜ்குமார் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, பாஓதல் – க. மதுராதேவி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நாடகம் – 'பழிக்குப்பழி' சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, சிறுகதை – திலகவதி சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம்.

# அச்சுவேலி லயன்ஸ் கழக தையல் பயிற்சி முடிவுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி லயன்ஸ் கழகம் நடாத்திய தையல் பயிற்சியில் சித்தியடைந்து சான்றிதழ் பெறுவோர் விபரம்:-

எஸ். சிவநிதி, எஸ். பத்மசீலி, எஸ். றஜனி, எஸ். ஜெயராணி, கே சந்திரவதனி வி. ரஞ்சினிதேவி, கே. பேபிமனோகரி, ஆர். சுபத்திரா, பி. அனோஜா, கே. தவமலர் எஸ். தமயந்தி, வி. தமயந்தி, எஸ். சசிகலா, வி. பத்மலோசனி, ஜே. சோபிதா சுந்தரி எஸ். ரதிகுமார், ரி. கலாவதி, எஸ். சசிகலய, ஏ. அரசி, ரி. மதுபாலா, எஸ். நிர்மலா, எஸ். செல்வராணி, எஸ். ரத்தினேஸ்வரி, ஆர். நளினி, எஸ். பிறேமாலா, கே. சாந்தினி, ஆர். சந்திரவதனி, கே. அருள்மொழி, எஸ். கேசகுமாரி, எஸ். பத்மாவதி, எஸ். துசிமராணி, எஸ். கலாவதி, ஆர். ரமணி, ஆர் பதிவிரதாமணி, ரி. கமலாதேவி, ரி. மாலினி, ரி. ருகினி. ரி. ஆனந்தகுமாரி, கே. யசோதா, எஸ். கமலேஸ்வரி, ஆர். கலாநிதி, ரி. மர்மராணி, எஸ். ஜெயவதனா, என். கலாராணி, கே. மனோரஞ்சிதம், ரி. முத்துலட்சுமி, பி. கௌரி, கே. தேவகுஞ்சரி, எஸ், கெங்காதேவி.

இவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அச்சுவேலி மகா வித்தியாலய மண்டபத்தில் சென்ற 28ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

அன்று நடைபெறவிருந்த லயன் கழக அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு டிசம்பர் 28ம் திகதி நடைபெற விருப்பதாக அச்சுவேலி லயன்ஸ் கழக செயலாளர் திரு. க. கனகராசா தெரிவித்தார்.

# கல்வியும், கடவுள் பக்தியும் மேம்பாடு தரும் சக்திகள்

(புங்குடுதீவு)

''கல்வியும் கடவுள் பக்தியும் மனிதர்களை மேம்படுத்தும் மகத்தான சக்திகள் என்பதை நாம் உணரவேண்டும். ஒரு தச்சுத்தொழிலாளியின் மகனாகப் பிறந்து கூலித்தொழில் புரிந்து கொண்டே செல்வந்தர்களிடம் இரவலாகப் புத்தகம் பெற்றுப் படித்து சட்டவாதியாகி அமெரிக்காவின் ஜனாதிபதி என்ற பாரிய ஸ்தானத்தை அடைந்து உலகப் புகழ் பெற்ற ஆபிரகாம் லிங்கன் போன்றவர்களின் வாழ்க்கையை இன்றைய இளஞ்சிறார்கள் முன்மாதிரியாகக்கொள்ள வேண்டும்.

ஊரைதீவு சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய அலுவலகமான அறிவகத்தில் இடம் பெற்ற போதுஅதில்கலந்து உரையாற்றிய தமிழர் கலாச்சாரச் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ் கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. க. சோமாஸ்கந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. எஸ். கே. மகேந்திரன் மேலும் பேசியதாவது:- ''பொதுப்பணிகளில் ஈடுபடுகின்ற தாபனங்கள் அகதிகளுக்கு உதவும் பணிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். உறைவிடங்களையும் உடமைகளையும் ஏன் உறவினர்களையும் கூட இழந்தநிலையில் வந்திருக்கும் எமது உடன் பிறப்புக்களுக்கு உதவவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும் என்றார்.

நிலைய நிர்வாகிகள் தெரிவின் போது தலைவராகசெ. நித்தியானந்தன் பி. எஸ்ஸியும் உப தலைவராக செ. ரூபகாந்தனும் செயலாளராக அ. நிமலனும் உப செயலாளராக ந. தனபாலசிங்கமும் எண்பார்வையாளராக தி. ஸ்ரீதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# கர்ப்பவதியான காலத்தில் உணவில் அவதானம் வேண்டும்

(வேலணை)

கர்ப்பவதியான காலத்தில் தாய்மார்கள் உணவு போசாக்கு விடயத்தில் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும். இதனை பல தாய்மார்கள் உணரவில்லை. இதனால் அவர்கள் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகின்றார்கள். பிறக்கும் குழந்தைகள் சராசரி நிறையிலும் பார்க்க முப்பது வீதம் நிறை குறைவாக காணப்படுவர். ஊட்டச்சத்து குறைவால் எளிதில் தொற்று நோய்கள் ஏற்படவும், காரணமாகி விடுகின்றது.

இவ்வாறு திட்டம் செயல்படுத்தல் அமைச்சின் உணவு ஊட்டச் சத்துப் பிரிவின்சார்பாக யாழ். திட்டமிடல் பணிமனையும், வேலணை கிழக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கமும் இணைந்து நடாத்திய தாய், சேய் நலன் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கா. வைத்தீஸ்வரன் குறிப்பிட்டார்.

வேலணை கிழக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவி ஆசிரியை திருமதி. தி பத்மாவதி தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து கருத்துரை வழங்குகையில் கர்ப்பகால ஊட்டச்சத்து குறைவினால் குழந்தைகள் முதல், இரண்டு வருடத்தில் மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளாக வளர்கின்றனர். குறிக்கப்பட்ட காலத்தின் பின் மூளை வளர்ச்சிக்குறைவை நிவர்த்தி செய்ய முடியாது போகின்றது. அப்பிள்ளை குடும்பத்திற்கோ, சமூகத்திற்கோ பயன்படாத பிள்ளையாகவும் போய் விடுகின்ற இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்றார். ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி. எல். கதிர்காமலிங்கம் தாய்ப்பாலூட்டுதலின் முக்கியத்துவமும் குழந்தைகளுக்கான குறை நிரப்பு உணவுகளும் என்னும் பொருள் பற்றி பேசுகையில்; தாய்ப்பாலூட்டுவது நாகரீகமற்ற செயல் என கூறி தம்பிள்ளைகளுக்கு தாய்ப்பாலூட்டுவதை நிறுத்தி வந்த மேலைநாட்டுப் பெண்மணிகள் கூட தாய்ப்பாலின் மகத்துவத்தை உணர்ந்து தம்பிள்ளைகளுக்கு அதனை இன்று வழங்கி வருகின்றார்கள். தாய்ப்பாலில் சத்துணவுகள் உண்டு, விலையில்லாத பொருள், அத்துடன் தாய்ப்பால் கொடுத்து வந்தால் பிள்ளைகள் மனோவளர்ச்சி உடையவர்களாகவும் வளர ஏதுவாகின்றது. தாய்ப்பால் கொடுக்கப்படாத காரணத்தினால். தாய்மாருக்கு மார்பு புற்று நோய் கூட ஏற்பட ஏதுவாகின்றது என்றார்.

வேலணை அரசினர் கிராமிய மருத்துவமனை பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி தங்கவேல் பேசுகையில், வேலணைப் பகுதி கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், மற்றும் தாய்மார்களுக்கும் இரத்த சோகை நோய் அதிகமாக ஊட்டச்சத்து குறைபாட்டினாலும் சிறந்த வைத்திய வசதியை பெறாத காரணத்தினாலுமே ஏற்பட ஏதுவாகின்றது என்றார். யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் தி. கிருபைதிலகன், யாழ். மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வி. செ. சுவாமிநாதன், வேலணை கால் நடை மருத்துவர் திருமதி. எஸ். சாம்பசிவம், வேலணை விவசாயப் போதனாசிரியை திருமதி. பி. சுப்பிரமணியம், ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

# நகைகளைமீளப் பெறுவதற்கு உடன் ஏற்பாடு வேண்டும்

## நிதி மந்திரிக்கு மகஜர்

''தமிழ்ப் பிரதேசங்களில் நிலவும் நிச்சயமற்ற நிலையால் போதிய வருமானமின்றி மக்கள் வாடுகின்றனர், ஒருசாரார் மக்கள் வங்கிக் கிளைகளில் தம்நகைகளை அடகு வைத்துவிட்டு அதற்குரிய வட்டிப் பணத்தையும் செலுத்தியும் மீளப் பெறமுடியாது அவதியுறுகின்றனர்.''

இவ்வாறு தமிழர் கலாச்சாரச்சங்கத் தலைவரும், சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் நிதிமந்திரி திரு. ரொனி டி மெல்லுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கூறியுள்ளார்.

''மக்களின் கஷ்டநிலை உணர்ந்து அரசு அவற்றை உடன் மீளப்பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.


## மில்க்வைற் சலவைப் பவுடர்




துரித சலவைக்கு நுரைவளம் மிகுந்த மில்க்வைற் சலவைப்பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.
56 கிராம் பைக்கற் ரூ. 2/– மட்டுமே.
10 மேலுறைகளை அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
— மில்க்வைற் – யாழ்ப்பாணம்

ஈழமுரசு

உதய சிந்தனை

கையிலே கிடைத்த நல்ல பொருளைப் புத்திமான் நழுவவிடாமல் காப்பான்.

—சேர். பொன். இராமநாதன்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

13-11-85 புதன்கிழமை (குரோதன - ஐப்பசி 28)

# இந்தியாவின் போக்கு மாறி வருகின்றதா?

கடந்த வாரம் நடைபெற்ற டில்லிப் பேச்சுவார்த்தைகள் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ள ஒரு நிலை, இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்வில் பல சந்தேகங்களையும் இப்போது ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே நிலவி வந்த பிணக்கைத் தீர்த்து இணக்கத்தை ஏற்படுத்த முன்வந்த இந்தியா, தனது நடுவர் நிலைமையிலிருந்து தவறி விடுமா?

இந்தக் கேள்விதான் இப்போது தமிழர்கள் முன்னால் தோன்றியுள்ளது.

அமைச்சர் தொண்டமான் சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பு நிகழ்ச்சியொன்றில் மிகத் துணிச்சலாகத் தெரிவித்த ஒரு கருத்து; நூற்றுக்கு, நூறு உண்மையானதாக இருக்கலாமோவென்ற உணர்வு இப்போது மேலோங்குவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

"இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரைவேக்காட்டுத் தீர்வொன்றைத் தமிழரை ஏற்குமாறு பாரதம் திணிக்கக் கூடாது" என்பதே அமைச்சர் தெரிவித்த கருத்து.

தனது பிரச்சினை தீரவேண்டுமென்பதற்காக ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தில் இந்தியா நடந்துகொண்ட முறையினால் மலையக மக்கள் இன்றும் பிரச்சினைக்குரியவர்களாகவே இருக்கின்றார்கள் என்பதையும் அமைச்சர் தொண்டமான் அங்கு சுட்டிக் காட்டியிருந்தார்.

அன்று எடுத்த ஓரபட்சமான முடிவைப் போல இன்றைய இனப்பிரச்சினையிலும் ஒரு முடிவைத் தமிழர் தலையில் திணிக்க இந்தியா முனையக் கூடாது. அவ்வாறு நடந்தால், தமிழினம் என்றென்றும் பிரச்சினையுடனேயே வாழ வேண்டி நேரிடும் என்று அமைச்சர் சொன்னதை, கடந்த வார டில்லிப்பேச்சு நிலை தெளிவாக விளக்குகின்றது.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நடுவராக வந்ததை தமிழ் மக்கள் மனமகிழ்வோடு, மிகுந்த நம்பிக்கையோடு, தாய் சேய் பாச உணர்வோடு ஏற்றுக் கொண்டார்கள்.

நடு நிலை நாடுகளின் தலைமைத்துவ நாடான இந்தியா மிகவும் நேர்மையுடன் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணம்.

பங்களாதேஷ் பிரச்சினையில் அதன் சுதந்திரத்துக்காகவும், அந்நாட்டு மக்களின் விடுதலைக்காகவும் பாரதம் வகித்த பங்கு, தமிழ் மக்கள் இந்தியா மீது அளவுக்கதிகமான நம்பிக்கை வைப்பதற்கு பிரதான காரணமாகவிருந்தது.

அன்னை இந்திரா இருக்கும் வரை, பார்த்தசாரதி இனப்பிரச்சினையில் சிறப்புத் தூதுவராகக் கடமையாற்றும் வரை அந்த நம்பிக்கை சிதறடிக்கப்படவில்லை.

ஆனால், ராஜீவின் தலைமைத்துவமும், பண்டாரியின் 'தரகர்' வேலையும், படிப்படியாக தமிழ் மக்கள் பாரதம் மீது வைத்திருந்த நம்பிக்கையைக் குறைத்து வருவது கண்கூடு.

இலங்கைப் பிரச்சினை வேறு, பங்களாதேஷ் பிரச்சினை வேறு என்றார்கள்; ஏற்றுக்கொண்டோம்.

தனிநாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார்கள்; பொறுமையுடன் கேட்டுக்கொண்டோம்.

இந்திய அரசியல் திட்டத்தில் நடைமுறையிலிருக்கும் அமைப்பைவிடக் கூடுதலாக எதனையும் எம்மால் சிபார்சு செய்ய முடியாது என்றார்கள்; வாளாவிருந்தோம்.

ஆனால், இந்திய அரசியலமைப்பில் இல்லாத, மிகக் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட மாகாணசபையை ஏற்க முடியாது என்று தமிழீழக் குழுக்கள் சொல்லும்போது, அவர்களைப் பார்த்து, "மாற்றுத் திட்டம் கொண்டு வா" என்று இந்தியா கேட்பது எந்த வகையில் நியாயமானது?

"தமிழீழமே முடிந்த முடிபு" என்ற தமிழர்கள் நிலையில், மாற்றுத்திட்டம் சமர்ப்பிக்க வேண்டியது இலங்கை அரசின் கடமை என்பதை இந்தியா மறந்து நடப்பது எதற்காக?

நடுவர் என்ற கோதாவில் நின்று, இந்தியா ஒரு மாற்றுத் திட்டத்தைச் சிபார்சு செய்யக் கூடாதா?

காந்தியும், நேருவும், இந்திராவும் கட்டிக்காத்த உண்மை, நீதி, நியாயம் என்ற நடுநிலையிலிருந்து இந்தியா வழுவாது நடந்துகொள்ள வேண்டும்!

★ அமெரிக்காவில் இது வரை 6000 பேர் பலி

# பாலியல் உறவினுல் பரவும் 'எயிட்ஸ்' கரிய மரண நோய்

இந்திய உபகண்டத்தில் 'எயிட்ஸ்' நோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். கண்டுபிடிக்கப்பட்டது தான் தாமதம், அடேயப்பா! இந்நோய் பரவாதிருக்க முழுப் பாரத அரசுமே தடுப்பு நடவடிக்கைகளில் இறங்கி விட்டது காரணம்? வைத்திய அதிகாரிகளுக்கு அதன் விளைவுகள் நன்கு புரியும். 'கரிய மரணம்' எனப்பட்ட காலரு நோய் சில நூற்றுண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் எவ்வாறு இலட்சோப லட்சம் உயிர்களைப் பலிகொண்டதோ, அதேபோல இந்தியாவின் தொண்ணூற்றைந்து கோடி மக்கள் மத்தியிலும் ஒரு மாபெரும் மரண அலையை விளைக்க இடமுண்டு என்பதே அவர்களுடைய பேரச்சம்

மேற்கு நாடுகளில் 'எயிட்ஸ்' ஏற்படுத்திய தாக்கமோ பொல்லாதது. ஆனல் அது இந்திய நாட்டைத் தாக்குமாயின் அதனிலும் பார்க்க விளைவுகள் பன்மடங்கு பயங்கரமானவையாக இருக்கும், என்கின்றனர் வைத்திய அவதானிகள்.

பொதுவாக நம்மெல்லோரிடமும் நோய் எதனையும் எதிர்க்கும் சக்தி உள்ளூர அமைந்திருக்கிறது. 'எயிட்ஸ்' நோய்க் கிருமிகள் மிக்க வலிமையுடைய 'வைரஸ்' இனத்தைச் சேர்ந்தவை. இவை எமது நோயெதிர்க்கும் சக்தியை அற்றுப் போகச் செய்து விடுகின்றன. இந்நோயினது அறிகுறிகளின் தொகுப்பே 'எயிட்ஸ்' எனச் சுருக்கமாக வழங்கி வருகின்றது. 'அக்குவயேர்ட் இம்மியூன் டெஃவிஷென்ஸி ஸின்ட்ரோம்' எனும் நீண்ட ஆங்கிலப் பதம் தான் இப்பிணியின் முழுப் பெயராகும். அப்பதத் தொடரிலுள்ள சொற்களின் முதல் எழுத்துக்களே ஒன்றிணைந்து 'ஏ. ஐ. டி. எஸ்.' ஆயின.

பாலியலுறவு மூலம் பரவும் பிணிகளின ஆய்வுக்கான இந்தியக் கழகத் தலைவர் ஜே. கே. மணியர் தரும் விளக்கம் இதோ: "'எயிட்ஸ் வைறஸ்' செழித்துப் பெருகுதற்கு அமோக வாய்ப்புகள் உள்ளன. அசௌக்கியச் சூழ்நிலைகளும், நோய் நிருணயத்திற்கு வேண்டிய வசதிகள் போதாமையும் இவ்வாய்ப்புகள் ஏற்பட வழிகோலுகின்றன. நோயானது 'பிளேக்' எனப்படும் எலிக்கடி வியாதிபோலப் படுமோசமாக அதிவிரைவாகப் பரவும்."

"எயிட்ஸ்" நோயைக் கட்டுப்பாட்டினுள் அடக்கிவைத்திருக்கும் முயற்சியில் இன்று முன்னணியில் நிற்பது பாகிஸ்தான். சென்றமாதம் இப்பிராந்தியத்தில் அந்நாட்டிலேதான் எயிட்ஸ் பிணியாள் ஒருவர் முதன் முதலாக அவதானிக்கப்பட்டார்.

பாகிஸ்தான் சுகாதார அமைச்சர், நூர் ஹையத் கான் நூன், ஒரு தடையை விதித்துள்ளார். வெளி நாடுகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகத் தங்கி நின்று தாய்நாடு மீண்டுள்ளோர் இரத்ததானம் செய்தலாகாது என்பது அத்தடையாணை.

அமெரிக்க ஐக்கிய அரசுகளில் மாத்திரம் "எயிட்ஸ்" நோயினல் உயிரிழந்தோர் ஆறுயிரம் பேர் வரையில் இருப்பர். பாலியல் உடலுறவு இரத்தம் ஆகியவற்றின் வாயிலாக இந்த வியாதி ஒருவரிலிருந்து இன்னெருவருக்குத் தொற்றுமென அறியப்படுகிறது, தன்னினச் சேர்க்கை பழக்கம் உடையோர், சாதாரணமானவர்க்குப் போல குருதி உறைதல் இல்லாத 'ஹீமோஃபீலியா' பிணியாட்கள் ஆகியோரே 'எயிட்ஸ்' ரோகிகள் ஆவது இதுகாறும் காணப்பட்டுள்ளது

பாகிஸ்தானில் ஆண்டொன்றிற்கு இரண்டரைக்கோடி டொலர் பெறுமானமுள்ள ஆடைகளானவை பயன்படுத்தப்பட்டபின் வெளிநாடுகளினின்றும் இறக்குமதியாகின்றன. 'உவின்ரர்' எனப்படும் பனிப்பருவகாலத்தில் பாகிஸ்தான் தொழிலாளர்களும்நடுத்தர வர்க்கத்தினரும் இவற்றையே பயன்படுத்திவருகின்றனர். அமைச்சர் நூன் இவ்வுடைகள் மூலம் எயிட்ஸ் வைறஸ் நாட்டினுள் வருகிறதா எனப் பரிசோதிக்குமாறும் தமது அதிகாரிகளுக்கு ஆணைபிறப்பித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசியல்வாதிகள் இதனைவிடக் கடும் முற்காப்பு நடவடிக்கைகள் அமுலாதல் வேண்டும் என்கின்றனர். நாட்டில் வந்திறங்கும் வெளிநாட்டவர் அனைவரும் 'எயிட்ஸ் வைறஸ்' இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் கட்டாயமாக வேண்டுமெனக் கோஷம் எழுப்பி வருகின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகள் எவையேனும் இதுவரை இந்தியாவின் சிந்தனையில் இடம் பெறவில்லை. ஆயினும் 'எயிட்ஸ்' அச்சுறுத்தலையிட்டு இந்திய அதிகாரிகள் அச்சம் அடைந்துள்ளமையை ஒத்துக்கொள்கின்றனர்.

"எயிட்ஸ்" இந்தியாவுக்கு இன்னமும் வரவில்லை. இதனை நம் ஓரளவு திண்ணமாக அறிவோம். இருந்தாலும் நூற்றுக்கு நூறு சத வீதம் இதனையிட்டு நாம் நிச்சயமாகச் கூற இயலாதிருக்கிறோம் என்றார் டாக்டர் ஆ. என். பாசு, தொற்று நோய்களுக்கான தேசிய நிறுவனப்பணிப்பாளர் தொடர்ந்தும் அவர் விடுக்கும் எச்சரிப்பு வருமாறு: 'எமது உடனடியான பணி, டாக்டர்களை விழிப்பு நிலையில் இருக்கச்செய்தலாகும்... முதலாவது "கேஸ்" கண்டுபிடிப்பு கேந்திர முக்கியத்துவமானது.

ஆனல் நாம் இதுவிடயத்தில் இன்னமும் 'திக்குத் தெரியாத காட்டினுள்'' ளேயே நிற்கிறோம். நோய் எப்படி பரவுகிறது? தொற்றிக் கொள்கிறது என்பதையிட்டுத்தானும் நாம் தெளிவாக எதனையும் இது வரை அறிந்து கொள்ள இயலாதிருக்கிறோம். ஒருவேளை இவ் வைரஸ்களைச் சுமந்துவருவன நுளம்புகளாகக்கூட இருக்கலாம் இங்கெல்லாம் இப்பூச்சிகளின் தொல்லை சகிக்க முடியாது. 'எயிட்ஸ், வைறஸ்கள் பயணஞ் செய்யும் மார்க்கம் இப்படியானதாக இருந்தால் முடிவு நாசம்தான்.

தனியார் இரத்ததான வர்த்தகத்தின் ஊடாகவும் காட்டுத் தீ போல எயிட்ஸ் வைறஸ் பரவக்கூடும். அரசாங்க வைத்தியசாலைகளில் தனியார் இரத்த தானம் ஊக்குவிக்கப் படுவதில்லை. இருந்தாலும் இத்தகைய குருதி பரவலாகப் பயன்பட்டு வருவது உண்மை. தனியார் துறையில் விற்பனையாகும் உதிரத்தை இக்கிருமியினைக் கருத்தில் வைத்து கண்காணிப்பதற்கு வழியில்லை.

இப்படி விற்பனை செய்யப்படும் இரத்தம் எவ்வளவாக இருக்கும் என்பதைத் தாம் லீட்டர் கணக்கில் அறிய மாட்டார் எனக் குறிப்பிட்ட பணிப்பாளர் பாசு, இவ்வியாபாரம் பரவலாக நிலவுகின்றமையை ஒத்துக்கொண்டார்.

இந்தியர் ஒருவர் சத்திர சிகிச்சைக்கு ஆளாகுமுன், அதற்குத் தேவைப்படக்கூடிய இரத்தத்தை வைத்தியசாலைக்கு வெளியே கொள்வார். இல்லையேல் அதனை உறவினர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டதாக அவர் கூறிக் கொள்ளலாம்.

இந்தியாவினூடாகச் செல்லும் இளம் மேற்கத்திய உல்லாசப் பயணிகளும் தம்மிடமுள்ளஅற்ப சொற்ப நிதிவளங்களை இரத்த விற்பனை வாயிலாகக் குறைநிரப்புவது உண்டு.

## தடுப்பு நடவடிக்கைக்கு இலங்கையும் தயாராகிறது

இந்திய சுகாதார நிறுவனம் எனும் பெயர் கொண்ட தனியார் தரும தாபனம் ஒன்றினது செயலாளர், டாக்டர் ஐ எஸ். கிலாடா, டாக்டர்கள் மத்தியில் 'எயிட்ஸ்' ரோகம்பற்றிய அறிவு, அபாய உணர்வு என்பவற்றை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கத் திட்ட மிட்டுவருகிறார்.

டாக்டர்கள் 'எயிட்ஸ்' ரோக அறிவு பெற்று விழிப்புறுதிருப்பார்களாயின், பதினைந்தாம், பதினறும் நூற்றுண்டுகளில் ஐரோப்பிவில் நிலவிய 'கரிய மரணம்' போலும் பேரனர்த்தமொன்று பாரத தேசத்திலும் சம்பவிக்கக்கூடும் என அச்சம் கலந்த ஆருடம் கூறுகிறார் டாக்டர் கிலாடா.

இப்பொல்லாங்கு காணும் தமது பாங்கிற்கு, இந்திய சமுதாயத்திற் காலாதி காலமாகஉள்ள ஒரு குறைபாட்டை அவர் ஆதாரம் காட்டுகிறார். ஓர் 'உருத்திராக்க பூனைத்' தன்மை இச்சமுதாயத்தில் நிலவுவதனுல், பாலியல் சம்பந்தமான பிணிகளையிட்டோ, அப்பேர்ப்பட்ட ரோகங்கள் இங்கு நிலவுகின்றன என்று தானுமோ அவர்கள் வெளிப்படையாக எடுத்து உரைக்க தயங்குவர்.

டாக்டர் கிலாடா தொடர்ந்தும் கூறுவதாவது: பாரதத்தின் ஏழரைக் கோடி மக்களில் நூற்றுக்குப் பத்துச் சத விகிதமானேர், ஏதோ ஒரு வடிவில் பாலியல்

...5ம் பக்கம் பார்க்க

## கொள்ளை, தீவைப்பு சம்பவங்களால்

# தென்னாபிரிக்காவில் மீண்டும் இனக் கலவரம்

## பொலிஸ் சூட்டில் 3 பேர் பலி

(கேப்டவுன்)

**தென்னாபிரிக்காவில் கடந்த சில நாட்களாக வன்முறைகள் அதிகரித்து வருகின்றதாக அறிவிக்கப்படுகிறது. கறுப்பு இனத்தவர்கள் வெள்ளையர்களின் கடைகள், வீடுகளை கொள்ளையடித்தும், தீவைத்தும் வருகின்றனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டனர்.**

இங்குள்ள கேப்டவுண் மாகாணத்தில் பொலிஸாருக்கும் கலகக்காரருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொலிஸார் சுட்டதில் ஒருவர் பலியானார். கிழக்கு மாகாணப் பகுதியில் வீடு ஒன்றைச் சூறையாடச் சென்றவர்கள் மீது அதன் காவலாளி சுட்டதால் ஒருவர் பலியானார். வேறொரு சம்பவத்தில் அலுவலகம் ஒன்றைத் தாக்கியவர்கள்மீது நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஒருவர் கொல்லப்பட்டார்.

இங்கு வீதிகளில் பொலிஸாரும் ராணுவத்தினரும் ரோந்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இரு விமானங்கள் வானத்தில் மோதின பகுதிகள் கீழே விழுந்து வீடுகள் எரிந்தன

[நியூயோர்க்]

நியூயோர்க் நகருக்கு அருகில் வானத்தில் இரு விமானங்கள் மோதியதால் தீப்பிடித்து எரிந்து நிலத்தில் வீழ்ந்தன. மேலிருந்துகீழே விழுந்த பகுதிகளின் தீயினால் சில வீடுகளும் கட்டடங்களும் எரிந்தன. இதனால் பலர் தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தைப் பலர் பார்த்ததாகவும், நட்சத்திரங்கள் விழுவதைப் போல இவை இருந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## சீனாவில் 'எய்ட்ஸ்' நோய் ஒருவர் மட்டுமே பலியானார்

(பீக்கிங்)

சீனாவில் எயிட்ஸ் நோய் பரவாதிருக்க கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீனாவின் எல்லைப் பகுதிகளில் உள்ளே வருவோருக்கு இந்த நோயின் தடுப்பு மருந்து செலுத்தப்படுகிறது.

அங்கு நடைபெற்ற ஆய்வின் படி இதுவரை ஒருவரே அந்நோய்க்கு பலியானதாக சீன சுகாதார அமைச்சு அறிவித்தது.

# தமிழ் நாட்டில் தொடர் மழை பலர் அகதிகள்; 42 பேர் பலி

(சென்னை)

தமிழ் நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கடும் மழையினால் இதுவரை நாற்பத்திரண்டு பேர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலர்வீடுகளும், கட்டடங்களும் இடிந்து விழுந்ததால் மரணமானார்கள்.

தமிழகத்தில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நெல்வயல்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. பலரின் கால் நடைகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த வெள்ளத்தினால் பலர் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். மழைதொடர்ந்தும் பெய்து வருவதால் நிவாரண வேலைகளும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்துகள், ரயில் சேவைகளும் துண்டிக்கப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

## சர்வதேச திரைப்பட விழா

(பெங்களூர்)

சர்வதேச சிறுவர் திரைப்பட விழா இங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது. பிரதமர் ராஜீவ் காந்தி பிரதம அதிதியாகக் கலந்த கொண்டு உரையாற்றினார்.

## 40 பயணிகள் 5 விமான ஊழியருடன் கடத்திய உகண்டா விமானம் திடீரென இறக்கப்பட்டது

கடந்த ஞாயிறு பயணிகளுடன் கடத்தப்பட்ட உகண்டா விமானம் அங்குள்ள தென்மேற்குப் பகுதியிலுள்ள கசிசி விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

நாற்பது பயணிகளும் ஐந்து விமான ஊழியரும் பயணம் செய்த இந்த விமானம் கம்பாலாவில் இருந்து புறப்பட்ட சில மணி நேரத்தில் கடத்தப்பட்டது.

சிறையில் இருந்து தப்பியோடிய இராணுவ உயர் அதிகாரி ஒருவரே இதனைச் செய்ததாக உகண்டா வானொலி அறிவித்தது. கடத்தப்பட்டவர்கள் சுகமாக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நியூசிலாந்து வெற்றி

(சிட்னி)

அவுஸ்திரேலியாவிற்கும் நியூசிலாந்திற்கும் இடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றது.

இறுதி நாளான நேற்று நியூசிலாந்து ஒரு விக்கட், நாற்பத்தொரு ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவை வென்றது.

## இடமாற்றம்

(கொடிகாமம்)

கொடிகாமம் புகையிரத நிலைய ரிக்கட் பரிசோதகர் எஸ். சண்முகராசா மாங்குளம் புகையிரத நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதே நிலையத்தின் மற்றைய ரிக்கற் பரிசோதகரான எம். பொன்ராசா சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

## பாலியல் ....

— 4ம் பக்கத் தொடர்

உறவால் பரவும் நோயினாற் பாதிக்கப்பட்டோராவர். இருந்தும் இப்படியான பல பிணிகள் கண்டு பிடிக்கப்படுவதுமில்லை. பரிகாரம் அளிக்கப் பெறுவதுமில்லை.

டாக்டர்கள் விழிப்பு உணர்வு பெற்றிருந்தாலன்றி, எயிட்ஸ்' ரோக நிலையும் அப்படியானதாகத்தான் இருக்கும். எவர் கண்களிலும் கருத்திலும்படாதபடி மூடி மறைக்கப்பட்டுவிடும், என்றார் டாக்டர் கிலாடா கவலை தோய்ந்த தொனியில்.

வெளிநாட்டு பாலியல், உல்லாசப் பயணிகளும் இவ்வகையில் 'எயிட்ஸ்' பிணி பரப்புதற்குப் பெருமளவு காரணராக உள்ளனர் என்றார் டாக்டர் கிலாடா. பிரதானமாக அரபுக் குடாக் கடல் நாடுளினின்றும் வரும் இவர்கள், பம்பாயின் பொது மகளிரது அபிமானிகளாக உள்ளனர். இம் மகளிர் ஒரு இலட்சம் பேர் வரையில் இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

இப்பயணிகள் மீது இந்திய அரசு தடை விதித்தல் வேண்டும், அல்லது, அவர்கள் இந்திய மண் மீது காலடி எடுத்து வைத்ததும் அவர்களை வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுமாறு பணித்தல் வேண்டும், என டாக்டர் கிலாடா ஆலோசனை முன் வைத்தார்.

இலங்கைத் தீவிலும் உல்லாசப் பயணத்துறை பாரியது. வெளிநாட்டவர்கள் 'எயிட்ஸ்' நோயை இத்தீவினுள்ளும் கொண்டு வரக்கூடும் எனும் அச்சம் நிலவுகிறது.

இலங்கையில் இப்பிணி கண்டு பிடிக்கப்படவில்லை. ஆயினும் இது விடயத்தில் அரசு சாவதானமாக இருக்க விரும்புகிறது என்றார் சுகாதார அமைச்சர், ரஞ்ஜித் அத்தப்பத்து, இத்தொடர்பில் எடுக்கப்பெற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கூறிய அவர், பின்வருமாறு தெரிவித்தார்:

இலங்கை அரசு உலக சுகாதார நிறுவனத்திடம் 'எயிட்ஸ்' நோய் தவிர்ப்புபற்றிய ஆலோசனை, அந்நோய்ப் பரிசோதனை உபகரணம், முதலாயினவற்றைக் கோரியுள்ளது. தீவின் மேற்குக் கரையோர, உல்லாசப் பயணத்திற்குப் பேர் போன மாவட்டமொன்றில் வசிப்போரை 'எயிட்ஸ்' பரிசோதனைக்கு உட்படுத்தும் திட்டமொன்றை அரசு ஆராய்ந்து வருகிறது,

அண்மைக் காலங்களில் தன்னினப் பாலியற் சேர்க்கை வழமையுள்ளோரின் கைலாசம் என ஓர் அவப் பெயரையும் இம்மாவட்டம் ஈட்டியுள்ளது. சென்ற மாதம் இங்ஙனம் செய்தி வெளியிட்ட ஓர் இலங்கைப் பத்திரிகை அரசு இத்தகைய நடத்தை உள்ளவர்கள்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் எனவும் கோரிக்கை விடுத்தது.

அடுத்த படியாக பங்களாதேஷும் 'எயிட்ஸ்' பிரட்டலினின்றும் தனது மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்துவருகிறது. பங்களா தேசத்தவர்கள் அமெரிக்கா, கனடா முதலாம் மேற்குநாடுகளுக்குச்செல்வதை மட்டுப்படுத்துவது அவசியமா எனத் தீர்மானிக்கும் நோக்கத்துடன் உள்நாட்டிலும் அயல் தேசங்களுடனும் அது உரையாடல்களை நடத்திவருகிறது.

பங்களா தேஷ் சுகாதார அதிகாரிகள் இப்பேச்சுக்களைத் தொடர்ந்து வரும் அதேவேளை வெளிநாடுகளில் பயன் படுத்தப்பட்ட ஆடைகளின் இறக்குமதியை பாகிஸ்தான் செய்ததுபோன்று, தடைசெய்யவும் கூடும் எனத்தெரிவித்தனர்.

இவை எவ்வாருக இருப்பினும், "எயிட்ஸ்" நோய் எதிர்ப்பில் இந்திய உப கண்டம் அனுசரிக்கக்கூடிய சிறந்த ஒரு முற்காப்பு நடவடிக்கை அதன் பாரம்பரிய பண்புகளில் ஒன்ருகும் என நம்பிக்கை தெரிவித்தார். டாக்டர் கிலாடா கண்டிப்பான பாலியல் ஒழுக்கமே அது என்றுரவர்.

கண்மூடித்தனமாக நாம் மேற்கு நாட்டவர்களைப் பின்பற்றுகிறோம். அவர்களுடைய வியாதிகள் எல்லாவற்றையும் கூட நாம் தொற்ற வைத்துக் கொள்கிறோம் எனக் கவலைப் பட்டார் இந்திய சுகாதார நிறுவனத்தின் செயலாளரான டாக்டர் கிலாடா.

'ஆனால் இவற்றுடன் துணையாக, அங்கு எனிலோ, குறைந்த பட்சம் சுகாதாரமும் சமுதாய சக உணர்வும் சமூக ஒழுங்கமைப்பின் மூலதாரமாக இடம் பெறுகின்றன. இங்கே பாரத கண்டச் சமுதாயத்தினிடம் அத்தகைய அடித்தள அமைப்பு எதுவும் கிடையாது.' எனக் கூறிமுடித்தார் டாக்டர் கிலாடா.


இறைபத வாழ்வில்
31ஆம் நினைவு நாள்



வின்சன் பிலிப்

இன்றும் என்றும்-எங்கள்
மனதை விட்டகலா - அன்புத் தெய்வமே
உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

கரவெட்டி — மனைவி, பிள்ளைகள், உறவினர்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
பரிசளிப்பு விழாவும்
நிறுவனர் தினமும்

15-11-85 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி
பிரதம அதிதி: திரு. ம. சிமியாம்பிள்ளை
(யாழ். கல்விப் பணிப்பாளர்)
நிறுவனர் உரை! பேராசிரியர் அ. சண்முகதாஸ்

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

பகிரங்க ஏல விற்பனை

இடம்: வளவு-பழையபூங்கா (OLD PARK) யாழ்ப்பாணம்
காலம்: 13-11-1985, புதன்கிழமை மு. ப. 11.00 மணி.
பொருள்: மலை வேம்பு இரண்டு.

யாழ்ப்பாணம் (பழைய பூங்கா) வளவில் மழை காரணமாக விழுந்த இரண்டு பெரிய மலை வேப்ப மரங்கள் 1985-11-13-ம் திகதி மு. ப. 11.00 மணிக்கு யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபரால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும். வாங்குபவர் முழுத் தொகையையும் உடனே கட்டி மரங்களை அப்புறப் படுத்த வேண்டும்.

கச்சேரி. — அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

ஈழமுரசு

## ஆனையிறவு பொலிஸாரின் 'பட்டா' சம்பளப்பணம் கொள்ளை

ஆனையிறவு தடைமுகாம் பொலிஸாரின் 'பட்டா' சம்பளப்பணம் இனம் தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது, இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றது. ஆனையிறவு பொலிஸைச் சேர்ந்த திரு. ஏ. ஏ. யோகராஜா இந்தப் பணம் முப்பத்தையாயிரம் ரூபாவை யாழ். பொலிஸில் இருந்து பஸ்ஸில் கொண்டு சென்றபோது இக்கொள்ளை நடைபெற்றது இவர் பயணம் செய்த பஸ் கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடையில் சென்றபோது திடீரென வாகனமொன்றில் வந்த சுமார் பத்துப் பேர் ஆயுதமுனையில் இதனை எடுத்துச் சென்றனராம்.

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் நடந்தது:

# ஓடும் ரயிலில் நேற்று நடந்த கொள்ளை முயற்சி

# பிரயாணிகள் திரண்டு எதிர்த்ததால் தோல்வி!

(கொடிகாமம்)

நேற்று செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறையிலிருந்து மருதானைக்குச் சென்ற யாழ்தேவி ரயிலில் கொண்டு செல்லப்பட்ட ரிக்கட் வசூல் பணத்தை கொடிகாமம் புகையிரத நிலையத்தில் வைத்து கொள்ளை அடிக்க எடுக்கப்பட்ட முயற்சி பொதுமக்களின் கடும் எதிர்ப்பினால் தோல்வியில் முடிவடைந்தது.

யாழ்தேவி ரயில் கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட இருந்த சமயம் "கார்ட்வகனுக்குள்" ஆயுதபாணிகளாக ஏறிய சுமார் பத்துப்பேர் அதற்குள் இருந்த புகையிரத பிரதம பாதுகாவலரை கைகளை மேலே உயர்த்தும்படி பணித்துவிட்டு அங்கிருந்த வசூல் பண இரும்பு பெட்டியை கீழே இறக்கினராம்.

ஆனால் இதனை அறிந்த பிரயாணிகளும், புகையிரத ஊழியர்களும் உடனடியாகவே கொள்ளையர்களை சுற்றி வளைத்து அவர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு இரும்பு பெட்டியை தூக்க முடியாதவாறு தடுத்தனராம். கொள்ளையர்கள் ஒரு சமயத்தில் மேல்நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதிலும் பயணிகள் கொள்ளையரை கடுமையாக எதிர்த்து நின்றதினால் இறுதியில் அவர்கள் பணப்பெட்டியை அப்படியே விட்டுவிட்டு சென்று விட்டனர்.

அச்சமயம் அப்பணப் பெட்டியினுள் காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கொடிகாமம் புகையிரத நிலையங்களில் சேகரிக்கப்பட்ட பல்லாயிரம் ரூபா ரிக்கட் வசூல் பணம் இருந்ததாக கூறப்படுகிறது.

கீழே இறக்கப்பட்ட இரும்பு பெட்டி மீண்டும் பயணிகளால் புகையிரதத்தில் ஏற்றப்பட்டு யாழ்தேவி புறப்பட்டுச் சென்றது.

## அசிட் ஊற்றியதாலேயே தாக்கப்பட்டார்; கொள்ளை இடம்பெறவில்லை!

கடந்த வியாழக்கிழமை நல்லூர் ஆதீனத்துக்கு அருகிலுள்ள மளிகைக் கடையில் கொள்ளையோ கொள்ளை முயற்சியோ இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் இரவுக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட இயக்கம் ஒன்றின் இளைஞர்களுக்கு இக்கடையில் இருந்த கே. வி. கந்தையா என்பவர் அசிட் திராவகத்தை ஊற்றியதால் அந்த இளைஞர்கள் படுகாயமடைந்தனர். சக இயக்க இளைஞர்களால் இவர்கள் கொண்டு செல்லப்பட்டு வைத்திய சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தால் கோபம் கொண்ட மக்கள் அசிட் ஊற்றியவரைக் கடுமையாகத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. அந்த வயோதிபருக்கு உடனடியாகத் தண்டனை வழங்குமாறு மக்கள் கேட்ட போதிலும், இளைஞர்கள் நிதானமாகவே நடந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில்

## கலவரம் தூண்ட மொசாட் 15 கோடி ரூபா ஒப்பந்தம்

### ஈ.பி.ஆர்.எல்.எப். விடுத்த அறிக்கை

மட்டக்களப்பில் தமிழ் பேசும் மக்களிடையே மதக் கலவரங்களுக்குத் தூபமிட அரசு மொசாட்டின் துணையை நாடியதாகவும், இதன்படி பதினைந்து கோடி ரூபா ஒப்பந்த அடிப்படையில் மதக்கலவரத்தை ஏற்படுத்த மொசாட் ஒப்புக்கொண்டதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் ஈ. பி. ஆர்.எல். எஃப் மேலும் தெரிவித்துள்ளது.

திட்டமிட்ட சதியினரால் தூபமிடப்பட்ட இக்கலவரத்தால் காரைதீவில் ஏழரைக் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. கலவரம் தொடர்பான உண்மை நிலையினை விளக்கும வீடியோ படங்களையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எடுத்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இவர்கள் எடுத்தனர்

(மாங்குளம்)

மாங்குளம் பகுதி கடை வீதியிலுள்ள தொலைபேசிகள் மாங்குளம் முகாமில் உள்ளவர்களால் எடுத்துச் செல்லப்பட்டன. சில அரச அலுவலக தொலைபேசியும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## குத்திக் கொலை

(குருநகர்)

ஞாயிறன்று காலை யாழ். கதிற்றல் ஒழுங்கையில் மர்மமான முறையில் விலாப் பகுதியில் கததிக் குத்துக் காயத்துடன் இறந்து கிடக்கக் காணப்பட்ட கிளிநொச்சி வாசியான யோசேப் இராயப்பு (பாக்கியராசா) வயது 40 என்பவரின் சடலம் யாழ் அரசினர் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் குருநகரிலுள்ள அவரது உறவினர்களிடம் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டது.

## லைபீரியாவில் சதிப்புரட்சி

லைபீரியாவில் நேற்று நடைபெற்ற சதிப்புரட்சியொன்றின் மூலம் ராணுவ ஜெனரல் கியும்பா ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 46 பேர் பலி

(சென்னை)

தமிழகத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை நாற்பத்தாறாக உயர்ந்துள்ளது. (முந்திய செய்தி 5-ம் பக்கத்திலுள்ளது)

## பதற்ற நிலை

(கொடிகாமம்)

ஆனையிறவிலிருந்து கண்டி வீதிவழியே வாகனங்களில் சிலர் அணி அணியாக வருவதாக நேற்று முன்தினம் இப்பகுதியில் அடிபட்ட வதந்தியால் பதற்றநிலை உருவானது. பளை, கொடிகாமம், சாவகச்சேரி பகுதிகளிலுள்ள பாடசாலைகள், அலுவலகங்கள், கடைகள் யாவும் நேற்று நண்பகலுடனேயே மூடப்பட்டன. வீதிகள், சந்தைகள் எல்லாம் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. வாகனங்களும் பளைக்கு அப்பால் செல்லவில்லை.

## ஆரம்ப சுகாதார நிலையம்

(வேலணை)

வேலணை மேற்கு பகுதி மக்களின் சுகாதார நலன்களை முன்னிட்டு ஆரம்ப சுகாதார நிலையமொன்று வேலணை மேற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இந் நிலயத்தை வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் திறந்து வைத்துள்ளார். வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு நிர்வாக உத்தியோகஸ்தர் திரு. து. அ. அரியரத்தினம் மங்கள விளக்கு ஏற்றி வைக்க திரு. நா. வீரசிங்கம் இத்திறப்புவிழாவிற்கு தலைமை வகித்தார்.

வேலணை மேற்கு ஆரம்ப சுகாதார உத்தியோகஸ்தர் செல்வி பாலாம்பிகையின் முயற்சியினாலேயே இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### வெள்ளியன்று....

1ஆம் பக்கத் தொடர்... மக்களின சிக்கலான பிரச்சினைக்கு போலியான அரைகுறையான 'அரசியல் தீர்வு'காண முயற்சிகள் நடைபெறும் இவ்வேளையில் வழமை போலவே 'தமிழ்த் தலைமைகள்' வடக்கு கிழக்கு இணைப்புக்கு வக்காலத்து வாங்கும் அதேசமயம் மலையக மக்களின் இன்னல்கள் குறித்துக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

எனவே ஈழவர் அனைவரும் ஒன்றிணைந்து மலையக மக்கள் நாடற்றவர் ஆக்கப்பட்ட தேசிய துக்கதினத்தை அனுஷ்டிக்கும் முகமாக நவம்பர் 15ல் நாட்டை ஸ்தம்பிக்க வைப்போம் நவம்பர் 15ல் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளுவோம். மன்னார் முதல் மட்டக்களப்பு வரை பருத்தித்துறை முதல் பதுளை வரை பொத்துவிலுமுள்ளடங்கிய ஈழப்பிரதேசமெங்கும் முழு அடைப்பு மேற்கொள்ளுவோம். மலையக மக்களோடு எமது பலத்தையும் ஒன்றிணைப்போம். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதல்வர்—

...றுத் திட்டம் தயாரிக்க வேண்டும என திரு. பண்டாரி விடுத்த வேண்டுகோளை அமைச்சர் இராமச்சந்திரன் ஏற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே திரு. பண்டாரியின் விசேடசெய்தியுடன் கொழும்பு வந்த இலங்கையின் இந்தியத் தூதுவர் திரு பெர்னுட் திலகரத்தின ஜனதிபதியுடன் இருதடவை ஆலோசனை நடத்தினர். ஜனதிபதியின் செய்தியுடன் இவர் நாளை புதுடில்லி திரும்பலாமெனத் தெரிகின்றது,

### புகையிரத....

கொள்ளை முயற்சி பொது மக்களினலும், ஊழியர்களினலும் முறியடிக்கப்படடது.

நேற்றுக் காலை 7-30 மணியளவில் ஆயுதங்களுடன் வந்த கோஷ்டி ஒன்று புகையிரத நிலைய ஊழியர் ஒருவரை ஆயுதமுனையில் பயமுறுத்தியதாகவும, பின்னர் ரிககற் விற்பனை அறையுள் நுழைந்து ரிக்கற் விற்பனைப் பணத்தை கொளளையிட முனைந்தபோது பொதுமக்களும், ஊழியர்களும் கொள்ளையர்களை மறித்ததனல் அவர்கள் தப்பி ஓடி விடடதாகவும தெரிவிக்கப்படடது.

இதனல் இன்றைய பயணத்திறகான பயணச் சீட்டுக்கள் நேற்று வழங்கப்படவில்லை.

### கந்தளாய்...

திருமலை மாவட்டத்தில் சீருடையினரால் கொல்லப்பட்டவர்கள் பற்றிய பல புகார்கள் திருமலை பிரஜைகள் குழுவுக்குக் கிடைத்துள்ளது.

### யாழ்ப்பாணத்தி ...

...ளில், தற்போது வவுனியா மாவட்டம் வழமைக்குத் திரும்பிக் கொண்டு இருக்கிறதென்று சுட்டிக்காட்டியுள்ளார். அகதிகள் மீண்டும் வவுனியா வருமிடத்து அவர்களுககு வேண்டிய வசதிகள் செயது கொடுக்கப்படுமென்றும் முதல் மூன்று வாரங்களுக்கு யாழ்ப்பாணத்தில் அவர்கள் தற்போது பெற்று வரும் உதவி அடிப்படையில் நிவாரண உதவி வழங்கப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார். அகதிகள் தங்கள் தொழில்களை அல்லது விவசாயத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏதுவாக ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத பெறுமதியுள்ள மூலப் பொருட்களையோ அல்லது ரொக்கப்பணத்தையோ அவர்கள் பெறமுடியும்.

தத்தமது வீடுகளை இழந்தவர்கள் அவ்விழப்புப் பற்றி தமது கவனத்துககுக் கொண்டு வருமிடத்து அத்தகைய வீடுகளைத் திருத்தியமைக்கஅல்லது கட்டுவிக்க வேண்டிய முயற்சி எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார். அகதிகள் திரும்பி வரும்போது தாங்கள் தங்கியிருந்த பிரிவின் உதவி அரசாங்க அதிபரிடமிருந்து கடிதமொன்றைப் பெற்று வந்து வவுனியாவில் தாங்கள் வாழப் போகும் பகுதியின் உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்க வேண்டுமென வவுனியா அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்,

### வெள்ள அகதிகள்...

...க்கு ஒருவாரத்துக்கு உப உணவுப் பொருள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய விபரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

### ..ான்மீது...

லோசன (2), தில்லைநாதன் (32), சிவராஜா (32) ஆகியோர் முதலில் மல்லாவி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்.

இறந்தவர் வீரசிங்கம் (27) என அடையாளம் காட்டப்பட்டது.

### பூஸாவிலுள்ள...

வந்து பெறுமாறு இவர்களின் பெற்ருருக்கு அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இடம் பெயர்ந்தோர்—

வீதியிலுள்ள பன்சாலை ஒன்றில் பாதுகாப்புடன் தங்கியிருப்பவர்களே இத்தகைய கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றனராம்.

சிலர் தமது இல்லங்களில் எஞ்சியிருக்கும் கதவு, நிலை, உபகரணங்களை தம்முடன் கழற்றி எடுத்துவர முயற்சித்த சமயம் அவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக வவுனியாவிலிருந்து இங்கு இடம்பெயர்ந்து வந்தோரால் தெரிவிக்கப்படுகின்றது.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 13-11-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336